TNPSC Group 2, 2A Syllabus 2026 · குரூப் 2, 2A பாடத்திட்டம்

https://www.shanmugamiasacademy.in/tnpsc-group-2-2a-syllabus

TNPSC குரூப் 2, 2A (ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வு – II) தேர்வின் **முழுமையான அதிகாரப்பூர்வ பாடத்திட்டம்** – பொதுவான முதல்நிலைத் தேர்வு (குறியீடு 495), குரூப் 2 முதன்மைத் தேர்வு (குறியீடு 469), குரூப் 2A முதன்மைத் தேர்வு (குறியீடு 583) – அலகு வாரியாக, கேள்வி / மதிப்பெண் எண்ணிக்கையுடன், TNPSC வெளியிட்ட தமிழ்ப் பதிப்பில் உள்ளபடி. ஒவ்வொரு அலகுக்கும் எங்கள் இலவச quiz, பாடநூல், PYQ இணைப்புகள் உள்ளன.

The complete official syllabus of the **TNPSC Group 2 and 2A (CCSE-II) examination** – the common Preliminary exam (code 495), Group II Main exam (code 469) and Group IIA Main exam (code 583) – unit by unit with the number of questions or marks, in the official Tamil text with the official English under each unit.

முக்கிய விவரங்கள் · Key details

அறிவிக்கை · Notification	எண் 07/2026, 11.08.2026; இணைப்பு அறிவிக்கை 7A/2026, 03.09.2026 (கூடுதல் பணியிடங்கள்)
காலிப்பணியிடங்கள் · Vacancies	**846** – Group II 43, Group IIA 803
முதல்நிலைத் தேர்வு · Prelims	01.11.2026, காலை 9.30 – மதியம் 12.30 (நடைபெற்றது · held) – எங்கள் விடைக்குறிப்பு · our answer key
முதன்மைத் தேர்வு · Mains	தேதி முதல்நிலைத் தேர்வு முடிவுடன் அறிவிக்கப்படும் · to be announced with the prelims result
தேர்வு நிலைகள் · Stages	முதல்நிலை (தகுதிக்கு மட்டும்) + முதன்மை; **நேர்முகத் தேர்வு இல்லை** · no interview
பாடத்திட்டக் குறியீடு · Syllabus codes	முதல்நிலை 495 (Group II, IIA பொது; நாள் 12.12.2024) · Group II Mains 469 · Group IIA Mains 583 (நாள் 04.07.2025)

தேர்வு முறை · Scheme of examination

முதல்நிலைத் தேர்வு (Group II, IIA பொது) · Preliminary

பகுதி · Part	பாடம் · Subject	தரம் · Standard	கேள்விகள்
அ · A	பொது அறிவு · General Studies	பட்டப்படிப்பு · Degree	75
ஆ · B	திறனறிவும் மனக்கணக்கு நுண்ணறிவும் · Aptitude and Mental Ability	பத்தாம் வகுப்பு · SSLC	25
இ · C	பொதுத் தமிழ் **அல்லது** பொது ஆங்கிலம் · General Tamil **or** General English	பத்தாம் வகுப்பு · SSLC	100
மொத்தம் · Total – ஒரே தாள், OMR, 3 மணி நேரம், 300 மதிப்பெண்கள்			**200**

- அனைத்துப் பிரிவினருக்கும் குறைந்தபட்சத் தகுதி மதிப்பெண் **90** (300-க்கு).
- முதல்நிலைத் தேர்வு தகுதிக்கு (screening) மட்டுமே; அதன் மதிப்பெண் இறுதித் தேர்வுப் பட்டியலில் சேர்க்கப்படாது.
- பகுதி இ-வில் பொதுத் தமிழ், பொது ஆங்கிலம் – இவற்றில் ஒன்றை மட்டும் எழுத வேண்டும்.
- அலகு வாரியான கேள்வி எண்ணிக்கை தோராயமானது; தேவைப்பட்டால் சிறிது மாறலாம்.

முதன்மைத் தேர்வு · Main examination

தாள் · Paper	Group II (குறியீடு 469)	Group IIA (குறியீடு 583)
தாள் I · Paper I	தமிழ் தகுதித் தேர்வு · Tamil Eligibility Test – விரிந்துரை வகை (descriptive), 100 மதிப்பெண்கள், 3 மணி நேரம், குறைந்தபட்சம் 40 (தகுதிக்கு மட்டும் – தரவரிசைக்குக் கணக்கில்லை)	
தாள் II · Paper II	பொது அறிவு · General Studies – விரிந்துரை வகை, பட்டப்படிப்புத் தரம், **300 மதிப்பெண்கள்**, 3 மணி நேரம், குறைந்தபட்சம் 90; 7 அலகுகள்	கணினி வழித் தேர்வு (CBT), கொள்குறி வகை, 3 மணி நேரம், **300 மதிப்பெண்கள்**, குறைந்தபட்சம் 90: பகுதி அ பொது அறிவு 150 கேள்விகள் + பகுதி ஆ பொது நுண்ணறிவும் பகுத்தறிதலும் 50 கேள்விகள்

- ஒவ்வொரு இடஒதுக்கீட்டுப் பிரிவிலும் காலியிடங்களைப் போல 10 மடங்கு (1:10) தேர்வர்கள் முதன்மைத் தேர்வுக்கு அழைக்கப்படுவர்.
- தாள் I-இல் குறைந்தபட்ச மதிப்பெண் பெற்றால் மட்டுமே தாள் II மதிப்பீடு செய்யப்படும்; இறுதித் தரவரிசை தாள் II மதிப்பெண் அடிப்படையில்.
- பொது அறிவு வினாக்கள் தமிழ், ஆங்கிலம் இரண்டிலும் இருக்கும்.
- தாள் I (தமிழ் தகுதித் தேர்வு) பாடத்திட்டம் 469, 583 PDF-களில் இல்லை; அதற்கு TNPSC அறிவிக்கையைப் பார்க்கவும்.

முதல்நிலைத் தேர்வுப் பாடத்திட்டம் (குறியீடு 495) · Preliminary syllabus

பகுதி அ: பொது அறிவு – பட்டப்படிப்புத் தரம் (75 கேள்விகள்) · Part A: General Studies

அலகு I: பொது அறிவியல் 5 கேள்விகள்

Unit I: General Science (5 questions)

அறிவியல் அறிவு மற்றும் அறிவியல் உணர்வு – பகுத்தறிதல் – பொருள் உணராமல் கற்றலும் கருத்துணர்ந்து கற்றலும் – கடந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் பற்றி புரிந்து கொள்வதற்கான ஒரு கருவி அறிவியல்; பேரண்டத்தின் இயல்பு – பொது அறிவியல் விதிகள் – இயக்கவியல் – பருப்பொருளின் பண்புகள், விசை, இயக்கம் மற்றும் ஆற்றல் – அன்றாட வாழ்வில் இயக்கவியல், மின்னியல், காந்தவியல், ஒளி, ஒலி, வெப்பம், அணுக்கரு இயற்பியல், லேசர் (LASER), மின்னணுவியல் மற்றும் தகவல் தொடர்பியல் ஆகியவற்றின் அடிப்படை கோட்பாடுகளின் பயன்பாடுகள்; தனிமங்களும் சேர்மங்களும், அமிலங்கள், காரங்கள், உப்புகள், பெட்ரோலிய பொருட்கள், உரங்கள், பூச்சிக்கொல்லிகள்; உயிரியலின் முக்கிய கோட்பாடுகள், உயிர் உலகின் வகைப்பாடு, பரிணாமம், மரபியல், உடலியங்கியல், உணவியல், உடல்நலம் மற்றும் சுகாதாரம், மனிதநோய்கள்; சுற்றுப்புறச்சூழல் மற்றும் சூழலியல்; அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தில் அண்மைக்கால கண்டுபிடிப்புகள்; நடப்பு நிகழ்வுகள்.

> **English**
> Scientific knowledge and scientific temper – Power of reasoning – Rote learning vs conceptual learning – Science as a tool to understand the past, present, and future; Nature of universe – General scientific laws – Mechanics – Properties of matter, force, motion, and energy – Everyday application of the basic principles of mechanics, electricity and magnetism, light, sound, heat, nuclear physics, laser, electronics, and communications; Elements and compounds, acids, bases, salts, petroleum products, fertilizers, pesticides; Main concepts of life science, classification of living organisms, evolution, genetics, physiology, nutrition, health and hygiene, human diseases; Environment and ecology; Latest inventions in science and technology; Current affairs.

அலகு II: இந்தியாவின் புவியியல் 5 கேள்விகள்

Unit II: Geography of India (5 questions)

அமைவிடம் – இயற்கை அமைவுகள் – பருவமழை, மழைப்பொழிவு, வானிலை மற்றும் காலநிலை – நீர் வளங்கள் – இந்திய ஆறுகள் – மண், கனிம வளங்கள் மற்றும் இயற்கை வளங்கள் – காடு மற்றும் வன உயிரினங்கள் – வேளாண் முறைகள்; போக்குவரத்து – தகவல் தொடர்பு; சமூகப் புவியியல் – மக்கள்தொகை அடர்த்தி மற்றும் பரவல் – இனம், மொழிக் குழுக்கள் மற்றும் முக்கியப் பழங்குடிகள்; இயற்கைப் பேரிடர் – பேரிடர் மேலாண்மை; சுற்றுச்சூழல் மாசுபடுதல் – காரணங்களும் தடுப்பு முறைகளும் – பருவநிலை மாற்றம் – பசுமை ஆற்றல்; புவியியல் அடையாளங்கள்; நடப்பு நிகழ்வுகள்.

English

Location – Physical features – Monsoon, rainfall, weather and climate – Water resources – Rivers in India – Soil, Minerals and Natural Resources – Forest and Wildlife – Agricultural pattern; Transport – Communication; Social Geography – Population density and distribution – Racial, linguistic groups and major tribes; Natural calamity – Disaster management; Environmental pollution – Reasons and preventive measures – Climate change – Green energy; Geographical landmarks; Current affairs.

அலகு III: இந்தியாவின் வரலாறு, பண்பாடு மற்றும் இந்திய தேசிய இயக்கம் 10 கேள்விகள்

Unit III: History, Culture of India and Indian National Movement (10 questions)

சிந்து சமவெளி நாகரிகம் – குப்தர்கள், தில்லி சுல்தான்கள், முகலாயர்கள் மற்றும் மராத்தியர்கள் – விஜயநகர மற்றும் பாமினி அரசுகளின் காலம் – தென் இந்திய வரலாறு; தேசிய மறுமலர்ச்சி – ஆங்கிலேயர் ஆட்சிக்கு எதிரான தொடக்க கால எழுச்சிகள் – இந்திய தேசிய காங்கிரஸ் – தலைவர்கள் உருவாதல் – பி.ஆர்.அம்பேத்கர், பகத்சிங், பாரதியார், வ.உ.சிதம்பரனார், ஜவகர்லால் நேரு, காமராசர், மகாத்மா காந்தி, மௌலானா அபுல் கலாம் ஆசாத், தந்தை பெரியார், இராஜாஜி, சுபாஷ் சந்திர போஸ், ரவீந்திரநாத் தாகூர் மற்றும் பலர்; விடுதலைப் போராட்டத்தின் பல்வேறு நிலைகள்: அகிம்சை முறையின் வளர்ச்சி மற்றும் புரட்சிகர இயக்கங்கள்; வகுப்புவாதம் மற்றும் தேசப்பிரிவினை; இந்திய சமூகப் பண்பாட்டு வரலாற்றில் மாற்றங்களும் தொடர்ச்சியும்; இந்தியப் பண்பாட்டின் இயல்புகள், வேற்றுமையில் ஒற்றுமை – இனம், மொழி, வழக்காறு; இந்தியா ஒரு மதச்சார்பற்ற நாடு, சமூக நல்லிணக்கம்; கலை, அறிவியல், இலக்கியம் மற்றும் தத்துவம் ஆகிய வெவ்வேறு துறைகளில் தனித்துவம் கொண்ட ஆளுமைகள்.

English

Indus Valley Civilization – Guptas, Delhi Sultans, Mughals, and Marathas – Age of Vijayanagaram and Bahmani Kingdoms – South Indian History; National Renaissance – Early uprising against British rule – Indian National Congress – Emergence of leaders – B.R.Ambedkar, Bhagat Singh, Bharathiar, V.O.Chidambaranar, Jawaharlal Nehru, Kamarajar, Mahatma Gandhi, Maulana Abul Kalam Azad, Thanthai Periyar, Rajaji, Subash Chandra Bose, Rabindranath Tagore, and others; Different modes of agitation: Growth of Satyagraha and Militant Movements; Communalism and Partition; Change and continuity in the socio-cultural history of India; Characteristics of Indian Culture, Unity in Diversity – Race, Language, Custom; India as a secular state, Social harmony; Prominent personalities in various spheres – Arts, Science, Literature and Philosophy.

அலகு IV: இந்திய ஆட்சியியல் 15 கேள்விகள்

Unit IV: Indian Polity (15 questions)

இந்திய அரசியலமைப்பு – அரசியலமைப்பின் முகவுரை – அரசியலமைப்பின் முக்கிய கூறுகள் – ஒன்றியம், மாநிலம் மற்றும் யூனியன் பிரதேசங்கள்; குடியுரிமை, அடிப்படை உரிமைகள், அடிப்படைக் கடமைகள், அரசின் நெறிமுறைக் கோட்பாடுகள்; ஒன்றிய நிர்வாகம், ஒன்றிய நாடாளுமன்றம் – மாநில நிர்வாகம், மாநில சட்டமன்றம் – உள்ளாட்சி அமைப்புகள், பஞ்சாயத்து ராஜ்; கூட்டாட்சியின் அடிப்படைத் தன்மைகள்; மத்திய – மாநில உறவுகள்; தேர்தல் – இந்திய நீதி அமைப்புகள் – சட்டத்தின் ஆட்சி; பொதுவாழ்வில் ஊழல் – ஊழல் தடுப்பு நடவடிக்கைகள் – லோக்பால் மற்றும் லோக் ஆயுக்தா – தகவல் உரிமை – பெண்களுக்கு அதிகாரமளித்தல் – நுகர்வோர் பாதுகாப்பு அமைப்புகள் – மனித உரிமைகள் சாசனம்; இந்தியாவில் அரசியல் கட்சிகளும் மற்றும் ஆட்சியியல் முறைகளும்; நடப்பு நிகழ்வுகள்.

> **English**
> Constitution of India – Preamble to the Constitution – Salient features of the Constitution – Union, State and Union Territory – Citizenship, Fundamental Rights, Fundamental Duties, Directive Principles of State Policy – Union Executive, Union Legislature – State Executive, State Legislature – Local Governments, Panchayat Raj – Spirit of federalism: Centre – State relationships – Election – Judiciary in India – Rule of Law – Corruption in public life – Anti-corruption measures – Lokpal and Lok Ayukta – Right to Information – Empowerment of Women – Consumer Protection Forums, Human Rights Charter; Political parties and political system in India; Current affairs.

அலகு V: இந்தியப் பொருளாதாரம் மற்றும் தமிழ்நாட்டில் வளர்ச்சி நிர்வாகம் 20 கேள்விகள்

Unit V: Indian Economy and Development Administration in Tamil Nadu (20 questions)

இந்தியப் பொருளாதாரத்தின் இயல்புகள் – ஐந்தாண்டு திட்ட மாதிரிகள் – ஒரு மதிப்பீடு – திட்டக்குழு மற்றும் நிதி ஆயோக்; வருவாய் ஆதாரங்கள் – இந்திய ரிசர்வ் வங்கி – நிதி கொள்கை மற்றும் பணவியல் கொள்கை – நிதி ஆணையம் – மத்திய மாநில அரசுகளுக்கிடையேயான நிதிப் பகிர்வு – சரக்கு மற்றும் சேவை வரி; இந்திய பொருளாதார அமைப்பு மற்றும் வேலைவாய்ப்பு உருவாக்கம், நிலச் சீர்திருத்தங்கள் மற்றும் வேளாண்மை – வேளாண்மையில் அறிவியல் தொழில்நுட்பத்தின் பயன்பாடு – தொழில் வளர்ச்சி – ஊரக நலன்சார் திட்டங்கள் – சமூகப் பிரச்சனைகள் – மக்கள் தொகை, கல்வி, நலவாழ்வு, வேலைவாய்ப்பு, வறுமை; தமிழ்நாட்டின் மனிதவள மேம்பாட்டுக் குறியீடுகளும் அவற்றை தேசிய மற்றும் பிற மாநிலங்களுக்கான குறியீடுகளுடன் ஒப்பாய்வும் – தமிழ்நாட்டின் சமூக பொருளாதார வளர்ச்சிக்கு சமூக மறுமலர்ச்சி இயக்கங்களின் பங்களிப்பு; அரசியல் கட்சிகளும் பலதரப்பு மக்களுக்கான நலத்திட்டங்களும் – இடஒதுக்கீட்டுக் கொள்கைக்கான நியாயங்களும் சமூக வளங்களைப் பெறும் வாய்ப்புகளும் – தமிழ்நாட்டின் பொருளாதார போக்குகள் – தமிழ்நாட்டின் சமூக பொருளாதார வளர்ச்சியில் சமூகநலத் திட்டங்களின் தாக்கமும் பங்களிப்பும்; சமூக நீதியும் சமூக நல்லிணக்கமும் சமூகப் பொருளாதார மேம்பாட்டின் மூலாதாரங்கள்; தமிழ்நாட்டின் கல்வி மற்றும் நலவாழ்வு (Health) முறைமைகள்; தமிழ்நாட்டின் புவியியல் கூறுகளும் பொருளாதார வளர்ச்சியில் அவற்றின் தாக்கமும்; பல்வேறு துறைகளில் தமிழ்நாடு நிகழ்த்தியுள்ள சாதனைகள்; தமிழ்நாட்டில் மின்னாளுகை; பொது விழிப்புணர்வும் (Public Awareness) பொது நிர்வாகமும் – நலன்சார் அரசுத் திட்டங்களும் அவற்றின் பயன்பாடும், பொது விநியோக அமைப்புகளில் (Public delivery systems) நிலவும் சிக்கல்கள்; தற்போதைய சமூகப் பொருளாதார பிரச்சனைகள்; நடப்பு நிகழ்வுகள்.

English

Nature of Indian Economy – Five-year plan models – an assessment – Planning Commission and Niti Aayog; Sources of revenue – Reserve Bank of India – Fiscal Policy and Monetary Policy – Finance Commission – Resource sharing between Union and State Governments – Goods and Services Tax; Structure of Indian Economy and Employment Generation, Land Reforms and Agriculture – Application of Science and Technology in Agriculture – Industrial growth – Rural welfare oriented programmes – Social problems – Population, Education, Health, Employment, Poverty; Human Development Indicators in Tamil Nadu and a comparative assessment across the Country – Impact of social reform movements in the socio-economic development of Tamil Nadu – Political parties, and welfare schemes for various sections of people – Rationale behind the reservation policy, and access to the social resources – Economic trends in Tamil Nadu – Role and impact of social welfare schemes in the socio-economic development of Tamil Nadu – Social Justice and social harmony as the cornerstones of socio-economic development; Education and health systems in Tamil Nadu; Geography of Tamil Nadu and its impact on economic growth; Achievements of Tamil Nadu in various fields; e-Governance in Tamil Nadu; Public awareness and General administration – Welfare oriented Government schemes and their utility, Problems in public delivery systems; Current socio-economic issues; Current affairs.

அலகு VI: தமிழ்நாட்டின் வரலாறு, பண்பாடு, மரபு மற்றும் சமூக – அரசியல் இயக்கங்கள் 20 கேள்விகள்

Unit VI: History, Culture, Heritage and Socio-Political Movements in Tamil Nadu (20 questions)

தமிழ் சமுதாய வரலாறு, அது தொடர்பான தொல்லியல் கண்டுபிடிப்புகள், சங்க காலம் முதல் இக்காலம் வரையிலான தமிழ் இலக்கிய வரலாறு; திருக்குறள் – மதச் சார்பற்ற தனித்தன்மையுள்ள இலக்கியம் – அன்றாட வாழ்வியலோடு தொடர்புத் தன்மை – மானுடத்தின் மீதான திருக்குறளின் தாக்கம் – திருக்குறளும் மாறாத விழுமியங்களும் – சமூக அரசியல் பொருளாதார நிகழ்வுகளில் திருக்குறளின் பொருத்தப்பாடு – திருக்குறளில் தத்துவக் கோட்பாடுகள்; விடுதலைப் போராட்டத்தில் தமிழ்நாட்டின் பங்கு – ஆங்கிலேயருக்கு எதிரான தொடக்க கால கிளர்ச்சிகள் – விடுதலைப் போராட்டத்தில் பெண்களின் பங்கு; பத்தொன்பது மற்றும் இருபதாம் நூற்றாண்டுகளில் தமிழ்நாட்டின் சமூக – அரசியல் இயக்கங்களின் பரிணாம வளர்ச்சி – நீதிக்கட்சி, பகுத்தறிவு வாதத்தின் வளர்ச்சி – சுயமரியாதை இயக்கம், திராவிட இயக்கம் மற்றும் இவ்வியக்கங்களுக்கான அடிப்படை கொள்கைகள், தந்தை பெரியார் மற்றும் பேரறிஞர் அண்ணாவின் பங்களிப்புகள்.

> **English**
> History of Tamil Society, related archaeological discoveries, Tamil literature from Sangam age till contemporary times – Thirukkural – Significance as a secular literature – Relevance to everyday life, Impact of Thirukkural on humanity, Thirukkural and universal values – Relevance to Socio-politico-economic affairs, Philosophical content in Thirukkural; Role of Tamil Nadu in freedom struggle – Early agitations against British Rule – Role of women in freedom struggle; Evolution of 19th and 20th century socio-political movements in Tamil Nadu – Justice Party, Growth of Rationalism – Self Respect Movement, Dravidian Movement, and principles underlying both these movements; Contributions of Thanthai Periyar and Perarignar Anna.

பகுதி ஆ: திறனறிவும் மனக்கணக்கு நுண்ணறிவும் – பத்தாம் வகுப்புத் தரம் (25 கேள்விகள்) · Part B: Aptitude and Mental Ability

அலகு I: திறனறிவு 15 கேள்விகள்

Unit I: Aptitude (15 questions)

சுருக்குதல் – விழுக்காடு – மீப்பெரு பொதுக் காரணி (HCF) – மீச்சிறு பொது மடங்கு (LCM); விகிதம் மற்றும் விகிதாச்சாரம்; தனிவட்டி – கூட்டு வட்டி – பரப்பு – கொள்ளளவு – காலம் மற்றும் வேலை.

> **English**
> Simplification – Percentage – Highest Common Factor (HCF) – Lowest Common Multiple (LCM) – Ratio and Proportion – Simple interest – Compound interest – Area – Volume – Time and Work.

அலகு II: காரணவியல் 10 கேள்விகள்

Unit II: Reasoning (10 questions)

தருக்கக் காரணவியல் – புதிர்கள் – பகடை – காட்சிக் காரணவியல் – எண் எழுத்துக் காரணவியல் – எண் வரிசை.

> **English**
> Logical reasoning – Puzzles – Dice – Visual reasoning – Alpha numeric reasoning – Number series.

பகுதி இ: பொதுத் தமிழ் – பத்தாம் வகுப்புத் தரம் (100 கேள்விகள்) · Part C: General Tamil

பகுதி இ-க்குப் பொதுத் தமிழ் அல்லது பொது ஆங்கிலம் – ஒன்றைத் தேர்வு செய்யலாம். பொது ஆங்கிலப் பாடத்திட்டம் கீழே தனியாக உள்ளது.

அலகு I: இலக்கணம் 25 கேள்விகள்

Unit I: Grammar (25 questions)

எழுத்து: பிரித்து எழுதுதல் – சேர்த்து எழுதுதல் – சந்திப்பிழை – குறில், நெடில் வேறுபாடு – லகர, ளகர, ழகர வேறுபாடு – னகர, ணகர வேறுபாடு – ரகர, றகர வேறுபாடு – இனவெழுத்துகள் அறிதல் – சுட்டு எழுத்துகள் – வினா எழுத்துகள் – ஒருமைப் பன்மை அறிதல்.
சொல்: வேர்ச்சொல் அறிதல் – வேர்ச்சொல்லில் இருந்து வினைமுற்று, வினையெச்சம், வினையாலணையும் பெயர், பெயரெச்சம் வகை அறிதல் – அயற்சொல் – தமிழ்ச்சொல், எதிர்ச்சொல் – வினைச்சொல் – எழுத்துப் பிழை, ஒற்றுப்பிழை அறிதல் – இரண்டு வினைச் சொற்களின் வேறுபாடு அறிதல்.

அலகு II: சொல்லகராதி 15 கேள்விகள்

Unit II: Vocabulary (15 questions)

(i) எதிர்ச்சொல்லை எடுத்தெழுதுதல், ஓரெழுத்து ஒரு மொழி, உரிய பொருளைக் கண்டறிதல் – ஒருபொருள் தரும் பல சொற்கள், பொருந்தா சொல்லைக் கண்டறிதல், அகர வரிசைப்படி சொற்களைச் சீர்செய்தல்; ஒருபொருள் பன்மொழி – இருபொருள் குறிக்கும் சொற்கள் – பேச்சு வழக்கு, எழுத்து வழக்கு – சொல்லும் பொருளும் அறிதல் – ஒரு சொல்லிற்கு இணையான வேறு சொல் அறிதல்.
(ii) கோடிட்ட இடத்தில் சரியான சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுதல் – (எ.கா.) பள்ளிக்குச் சென்று கல்வி பயிலுதல் சிறப்பு (பயிலுதல், எழுதுதல்) – வானில் முகில் தோன்றினால் மழை பொழியும் (முகில், நட்சத்திரம்); பொருத்தமான பொருளைத் தெரிவு செய்தல் – (எ.கா.) ஊடகம் – தகவல் தொடர்புச் சாதனம் (செய்தி, தகவல் தொடர்புச் சாதனம்) – சமூகம் – மக்கள் குழு (மக்கள் குழு, கூட்டம்); ஊர்ப் பெயர்களின் மரூஉவை எழுதுக – (எ.கா.) புதுச்சேரி – புதுவை, மன்னார்குடி – மன்னை, மயிலாப்பூர் – மயிலை; பிழை திருத்துக. (எ.கா.) ஒரு – ஓர்; பேச்சு வழக்குச் சொற்களுக்கு இணையான தூய தமிழ்ச் சொற்களை இணைத்தல் – (எ.கா.) வெத்தில – வெற்றிலை, நாக்காலி – நாற்காலி;
(iii) பேச்சு வழக்குத் தொடர்களிலுள்ள பிழை திருத்தம் – (எ.கா.) நேத்து மழ பேஞ்சுது – நேற்று மழை பெய்தது; சொற்களை இணைத்துப் புதிய சொல் உருவாக்குதல்: மற்றும், அல்லது, ஆல், பிறகு, வரை, இதுவுமல்ல, இருப்பினும், எனினும், இதனால்; அடைப்புக்குள் உள்ள சொல்லைத் தகுந்த இடத்தில் சேர்த்தல் – (எனவே, ஏனெனில், ஆகையால், அதுபோல, அதனால், வரை, பின்பு) – (எ.கா.) நான் காட்டிற்குச் சென்றேன். அதனால் புலியைப் பார்த்தேன் – மாலைநேரம் முடியும் வரை விளையாடுவேன். தேர்வு முடிந்த பின்பு சுற்றுலா செல்லலாம்; பொருள் தரும் ஓர் எழுத்து – (எ.கா.) ஆ – பசு, ஈ – கொடு, தை – மாதம், தீ – நெருப்பு; பல பொருள் தரும் ஒரு சொல்லைக் கூறுக – (எ.கா.) கமலம், கஞ்சம், முளரி, பங்கயம் இச்சொற்கள் தாமரையைக் குறிக்கும்.

அலகு III: எழுதும் திறன் 15 கேள்விகள்

Unit III: Writing skills (15 questions)

(i) சொற்களை ஒழுங்குபடுத்திச் சொற்றொடர் அமைத்தல் – தொடர் வகைகள் – செய்வினை, செயப்பாட்டு வினை – தன்வினை, பிறவினை – ஒருமைப் பன்மை பிழையறிந்து சரியான தொடரறிதல்.
(ii) மரபுத் தமிழ்: திணை மரபு – உயர்திணை: அம்மா வந்தது – அம்மா வந்தாள்; அஃறிணை: மாடுகள் நனைந்தது – மாடுகள் நனைந்தன; பால் மரபு: ஆண்பால்: அவன் வந்தது – அவன் வந்தான்; பெண்பால்: அவள் வந்தது – அவள் வந்தாள்; பலர் பால்: அவர்கள் வந்தார்கள் – அவர்கள் வந்தனர்; ஒன்றன் பால்: அது வந்தன – அது வந்தது; பலவின் பால்: பறவைகள் பறந்தனர் – பறவைகள் பறந்தன; காலம்: நேற்று மழை பெய்யும் – நேற்று மழை பெய்தது; நேற்று வருவேன் – நேற்று வந்தேன்; இளமைப் பெயர்: பசு – கன்று; ஆடு – குட்டி; ஒலிமரபு: நாய் கத்தியது – நாய் குரைத்தது; வினைமரபு: கூடைமுடை, சோறு உண்; தொகை மரபு: மக்கள் கூட்டம் – ஆட்டு மந்தை; நிறுத்தல் குறியீடுகள்: கால்புள்ளி, அரைப் புள்ளி, முக்கால் புள்ளி, முற்றுப் புள்ளி, வியப்புக் குறி, வினாக்குறி அமையும் இடங்கள்.

அலகு IV: கலைச் சொற்கள் 10 கேள்விகள்

Unit IV: Technical terms (10 questions)

பல்துறை சார்ந்த கலைச் சொற்களை அதாவது அறிவியல், கல்வி, மருத்துவம், மேலாண்மை, சட்டம், புவியியல், தொழில்நுட்பம், ஊடகம், தகவல் தொழில்நுட்பம் உள்ளிட்ட பல்துறை சார்ந்த கலைச் சொல்லுக்கு நேரான தமிழ்ச் சொற்களை அறிந்திருக்க வேண்டும். (உதாரணம்: search engine – தேடு பொறி, வலசை – Migration, ஒவ்வாமை – Allergy, மரபணு – Gene, கடல் மைல் – Nautical Mile)

அலகு V: வாசித்தல் – புரிந்து கொள்ளும் திறன் 15 கேள்விகள்

Unit V: Reading comprehension (15 questions)

கொடுக்கப்பட்ட பத்தியிலிருந்து கேட்கப்பட்ட வினாக்களுக்கு சரியான விடையைத் தேர்ந்தெடுத்தல் – செய்தித்தாள் – தலையங்கம் – முகப்புச் செய்திகள் – அரசு சார்ந்த செய்திகள் – கட்டுரைகள் – இவற்றை வாசித்தல் – புரிந்து கொள்ளும் திறன் – உவமைத் தொடரின் பொருளறிதல் – மரபுத் தொடரின் பொருளறிதல் – பழமொழிகள் பொருளறிதல் – ஆவண உள்ளடக்கங்களைப் புரிந்து கொள்ளும் திறன்.

அலகு VI: எளிய மொழி பெயர்ப்பு 5 கேள்விகள்

Unit VI: Simple translation (5 questions)

ஆங்கிலம் மற்றும் பிறமொழிச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்கள் அறிதல் வேண்டும் – பயன்பாட்டில் உள்ள ஆங்கிலச் சொற்களை மொழிபெயர்த்தல் வேண்டும் (சான்று: pendrive, printer, computer, keyboard) – ஆவணங்களின் தலைப்பு – கோப்புகள் – கடிதங்கள் – மனுக்கள் – மொழிபெயர்ப்பு புரிந்து கொள்ளுதல்.

அலகு VII: இலக்கியம், தமிழ் அறிஞர்களும், தமிழ்த்தொண்டும்

15 கேள்விகள்

Unit VII: Literature, Tamil scholars and their service (15 questions)

திருக்குறள் தொடர்பான செய்திகள் (இருபது அதிகாரங்கள் மட்டும்) ஒழுக்கமுடைமை, பொறையுடைமை, ஊக்கமுடைமை, விருந்தோம்பல், அறன் வலியுறுத்தல், ஈகை, பெரியாரைத் துணைக்கோடல், வினை செயல்வகை, அவையஞ்சாமை, கண்ணோட்டம், அன்புடைமை, கல்வி, நடுநிலைமை, கூடா ஒழுக்கம், கல்லாமை, செங்கோன்மை, பண்புடைமை, நட்பாராய்தல், புறங்கூறாமை, அருளுடைமை – மேற்கோள்கள் – **அறநூல்** தொடர்பான செய்திகள் (நாலடியார், நான்மணிக்கடிகை, பழமொழி நானூறு, முதுமொழிக்காஞ்சி, திரிகடுகம், இன்னாநாற்பது, சிறுபஞ்சமூலம், ஏலாதி, அவ்வையார் பாடல்கள்) – தமிழின் தொன்மை, சிறப்பு, திராவிட மொழிகள் தொடர்பான செய்திகள் – உ.வே.சாமிநாத ஐயர், தெ.பொ.மீனாட்சி சுந்தரம், சி.இலக்குவனார் தமிழ்ப்பணி தொடர்பான செய்திகள் – தேவநேய பாவாணர், அகரமுதலி, பாவலரேறு பெருஞ்சித்திரனார், ஜி.யு.போப், வீரமாமுனிவர் தமிழ்த் தொண்டு தொடர்பான செய்திகள் – **தமிழ்ச் சான்றோர் பற்றிய செய்திகள்:** பாவேந்தர், டி.கே.சிதம்பரனாதர், தவத்திரு குன்றக்குடி அடிகளார், கண்ணதாசன், காயிதே மில்லத், தாரா பாரதி, வேலுநாச்சியார், பட்டுக்கோட்டைக் கல்யாணசுந்தரம், முடியரசன், தமிழ் ஒளி, உருத்திரங்கண்ணனார், கி.வா.ஜகந்நாதர், நாமக்கல் கவிஞர்.
குறிப்பு: அலகு VII-க்கான பாடத்திட்டம் பத்தாம் வகுப்பு வரையிலான (upto SSLC Standard) பாடப் புத்தகங்களை அடிப்படையாகக் கொண்டது.

Part C (option): General English – SSLC Standard (100 questions) · பொது ஆங்கிலம்

Unit I: Grammar **25 questions**

Parts of speech, Concord, Tense, Active voice and passive voice, Types of sentences, Statement, Interrogative, Imperative, Exclamatory, Transformation of statements into imperatives, Interrogatives into statements, Assertives into negatives, Exclamatory sentences into Statement, Imperatives into Inquisitive Interrogatives, Imperatives into Appreciative Statements, Verbs, Main Verbs and Auxiliary Verbs , Regular and Irregular Verbs, Infinitives, Gerunds, Participles, Question tags, Sentence patterns, Types of sentences, Simple, Compound and Complex, Phrases and clauses, Degrees of comparison, Positive, Comparative and Superlative, Direct into Indirect and Indirect to Direct, Synthesis of sentences, Punctuations.

Unit II: Vocabulary **15 questions**

Synonyms, Antonyms, Homonyms, Homophones, Collocations, Idioms & Phrases, Phrasal verbs, Spelling of words, Correct usage of words, One word substitution, Word creation, Singular and plural (including Zero plural), Derivatives, Abbreviations, British and American English, Compound words and Figures of speech.

Unit III: Writing Skills 10 questions

Letter writing (formal and informal) – Types of Letters (Multiple Choice Question), Jumbled sentences, Finding out the right order of sentences, Making queries (Multiple Choice Question), Inferences, Blanks, Substitutions.

Unit IV: Technical Terms 10 questions

Administrative Terms, Department related, General and Official terms, Official Correspondence (only basics).

Unit V: Reading Comprehension 20 questions

Unseen passages (News Paper, Headlines, Editorials, Government related News), Question Types – Strong question, Weak question, Match the following, Sentence Completion, Ascertainment of facts (Multiple Choice Question) – Choose the best response.

Unit VI: Translation 5 questions

Word Translation, Sentence Translation, Tense related translation tasks, Tense / Voice related tasks.

Unit VII: Literary Works 15 questions

SSLC Standard

Figures of Speech; Appreciation and Analysis of Poetry; Lines of Significance.
Poems: I Dream of Spices – Raj Arumugam; The Crocodile – Lewis Carroll; Teamwork – Edger Albert Guest; From a Railway Carriage – Robert Louis Balfour Stevenson; A Tragic Story – William Makepeace Thackeray; Sea Fever – John Masefield; Courage – Edger Albert Guest; The Age of Chivalry – George Krokos; Wandering Singers – Sarojini Naidu; The Listeners – Walter de la mere; Your Space – David Bates; Special Hero – Christine M. Kerschan; Stopping by Woods on a Snowy Evening – Robert Frost; Leisure – William Henry Davies; A Poison Tree – William Blake; The Power of a Smile – Tupac Shakur; On Killing a Tree – Gieve Patel; Advice from a Tree – Ilan Shamir; The Spider and The Fly – Mary Howitt; Never Trust a Mirror – Erin Hanson; The River – Ilan Shamir; Nature the Gentlest Mother – Emily Dickinson; The Comet – Norman Littleford; The Star – Jane Taylor; The Stick-Together Families – Edgar Albert Guest; Memories of My Dad – Rebecca D. cook; Life – Henry Van Dyke; The Grumble Family – L.M. Montgomery; The Secret of the Machines – Rudyard Kipling; The House on Elm Street – Naida Bush.
Prose: His First Flight – Liam O' Flaherty; The Night the Ghost Got In – James Grover Thurber; Empowered Women Navigating the World; The Attic – Satyajit Ray; Tech Bloomers; The Last Lesson – Alphonse Daudet; The Dying Detective – Arthur Canon Doyle; Learning The Game – Sachin Ramesh Tendulkar; I Can't Climb Trees Anymore – Ruskin Bond; Old Man River – Dorothy Deming (Drama); Seventeen Oranges – Bill Naughton; Water – The Elixir of Life – Sir C.V. Raman; From Zero to Infinity – Biography of Srinivasa Ramanujan; A Birthday Letter – Jawaharlal Nehru; The Nose Jewel – C.Rajagopalachari; Hobby – Turns A Successful Career; Sir Isaac Newton – The Ingenious Scientist – Nathaniel Hawthorne; My Reminiscence – Rabindranath Tagore; Sea Turtles – Sheker Dattatri; When the Trees Walked – Ruskin Bond; A Visitor from Distant Lands; Sports Stars – Mithali Dorai Raj; The Last Stone Carver – Sigrun Srivastav; Eidgah – Munshi Premchand; The Wind on Haunted Hill – Ruskin Bond; A Prayer to the Teacher – Subroto Bagchi; The Tempest – Tales From Shakespeare; A Hunter Turned Naturalist – Jim Corbett; The Cat and the Painkiller (An Extract from the Adventures of Tom Sawyer) – Mark Twain.
Note: The Syllabus for Unit VII is based on school textbooks (up to SSLC Standard).

குரூப் 2 முதன்மைத் தேர்வுப் பாடத்திட்டம் (குறியீடு 469) · Group II Mains syllabus

தாள் II – பொது அறிவு (பட்டப்படிப்புத் தரம்) [300 மதிப்பெண்கள்]; விரிந்துரை வகை. அலகு வாரியான மதிப்பெண்கள் கீழே. · Paper II – General Studies (Degree Standard) [300 marks], descriptive.

தாள் II: பொது அறிவு – 7 அலகுகள் (300 மதிப்பெண்கள்) · General Studies

அலகு I: தமிழ் நாட்டின் சிறப்புப் பார்வையுடன் நவீன இந்திய வரலாறு

40 மதிப்பெண்கள்

Unit I: Modern History of India with specific reference to Tamil Nadu (40 marks)

ஐரோப்பியர்களின் வருகை: போர்ச்சுகீசியர்கள், டச்சுக்காரர்கள், ஆங்கிலேயர்கள், டேனியர்கள் மற்றும் பிரெஞ்சுக்காரர்கள்; ஆங்கிலேய ஆட்சியின் விரிவாக்கம்: கர்நாடகப் போர்கள்; ஆங்கிலேய ஆட்சிக்கு எதிரான தொடக்கக் கால கிளர்ச்சிகள்: பாளையக்காரர்களின் கிளர்ச்சி, தென்னிந்தியப் புரட்சி, வேலூர்க் கலகம், இந்திய தேசிய இயக்கம் – மிதவாத, தீவிரவாத மற்றும் பயங்கரவாத இயக்கங்கள் – காந்திய சகாப்தம்; தமிழ்நாட்டில் விடுதலைப் போரின் தொடக்கக் காலம் – தமிழ்நாட்டிலிருந்து விடுதலைப் போராட்டத்திற்கான முதல் குரல் – பூலித்தேவர், வீரபாண்டிய கட்டபொம்மன், தீரன் சின்னமலை, வேலுநாச்சியார், குயிலி உள்ளிட்டோரின் போராட்டங்கள்; விடுதலைப் போராட்டத்தில் தமிழ்நாட்டின் பங்கு – வ.உ.சிதம்பரனார், பாரதியார், வ.வே.சுப்பிரமணியன், வாஞ்சிநாதன், சுப்பிரமணியசிவா, தி.ஷே.சு.ராஜன், இராஜாஜி, சத்தியமூர்த்தி, காமராஜர், ருக்மணி இலட்சுமிபதி, அம்புஜம்மாள் மற்றும் பிறர்; விடுதலை போராட்டத்தின் வகைகள் – தியாகங்கள் – இதழ்கள் – இலக்கியங்கள் – நாடகங்கள் – பாடல்கள் – திரைப்படங்கள் உள்ளிட்டவை; விடுதலை போராட்டத்திலும் சமூகப் பணியிலும் பெண்களின் பங்களிப்பு: மருத்துவர் முத்துலட்சுமி அம்மையார், மூவலூர் இராமாமிர்தம், கடலூர் அஞ்சலை அம்மாள், தில்லையாடி வள்ளியம்மை மற்றும் பிறர்; ஆங்கிலேய ஆட்சியின் தாக்கம்: கிறித்துவ சமய இயக்கங்கள், கல்வி வளர்ச்சி, நீதித்துறை, உள்ளாட்சி சுய நிர்வாக அமைப்பு, காவல் துறை, போக்குவரத்து மற்றும் தகவல் தொடர்பு – உள்நாட்டு தொழில்களின் வீழ்ச்சி – மேற்கத்திய பண்பாட்டுப் பரவல்; சமூக நீதிக் கோட்பாட்டின் தோற்றமும் வளர்ச்சியும், சமூக-மத இயக்கங்கள், அரசியல் கட்சிகள் மற்றும் சாதனைகள்.

> **English**
>
> Advent of Europeans: The Portuguese, the Dutch, the English, the Danish and the French; Expansion of British rule: Carnatic Wars; Early uprisings against British Rule: Revolt of Poligars, South Indian Rebellion, Vellore Mutiny, Indian National Movements – Moderates, Extremists and Terrorist Movements – Gandhian Era; Early stage of Freedom movement in Tamil Nadu – First voice for freedom struggle from Tamil Nadu – Protests by Pulithevar, Veerapandya Kattabomman, Dheeran Chinnamalai, Velunachiar, Kuyili and others; Role of Tamil Nadu in freedom struggle – V.O.Chidambaram, Bharathiyar, V.V. Subramanian, Vanchinathan, Subramania Siva, T.S.S Rajan, Rajaji, Sathyamoorthy, Kamaraj, Rukmani Lakshmi Pathi, Ambujammal and others; Types of freedom struggle – Sacrifices – Magazines – Literature – Plays/Drama – Songs – Films etc.; Contribution of women in the freedom struggle and social work: Dr Muthulakshmi Ammaiyar, Muvalur Ramamirtham, Cuddalore Anjalai Ammal, Thillaiyadi Valliammai, and others; Impact of British Rule: Christian Missionaries, Development of Education, Judiciary, Local Self Governance System, Police, Transport and Communication – Disappearance of Indigenous Industries – Spread of Western Culture; Origin and Growth of “Social – Justice” ideology, Socio- Religious Movements, Political Parties and Achievements.

அலகு II: தமிழ்ச் சமூகம் – பண்பாடும் தொன்மையும் 30 மதிப்பெண்கள்

Unit II: Tamil Society – Culture and Heritage (30 marks)

பண்டையத் தமிழ்ச் சமூகம் – தொல்லியல் அகழ்வாராய்ச்சி ஆதாரம் – அரிக்கமேடு, ஆதிச்சநல்லூர், கீழடி – சங்க இலக்கியம் – செம்மொழித் தமிழ்; திருக்குறள் – மானுட மேன்மைக்கான வாழ்க்கை நெறி – அன்றாட வாழ்விலும் நீதித்துறையிலும் நிர்வாகத்துறையிலும் திருக்குறளின் வழிகாட்டி நெறிமுறைகள் – ஒட்டு மொத்த மனிதகுல மேன்மைக்கும் ஒருங்கிணைப்பிற்கும் திருக்குறள் தரும் தத்துவச் சிந்தனைகள்; பத்தொன்பது மற்றும் இருபதாம் நூற்றாண்டுகளில் சமூக-அரசியல் இயக்கங்கள், வள்ளலாரின் சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம் – நீதிக்கட்சியின் தோற்றமும் வளர்ச்சியும் – பகுத்தறிவு இயக்கத்தின் தாக்கம், சுயமரியாதை இயக்கம், திராவிட இயக்க வரலாறும் வளர்ச்சியும், தனித் தமிழ் இயக்கம், தமிழ்ச் சமூக சீர்திருத்த ஆளுமைகள் – தந்தை பெரியார், அறிஞர் அண்ணா உள்ளிட்ட அறிஞர்கள்; கலை – தமிழர்களின் பண்பாட்டு மரபுகள் – தமிழர்களின் பண்டைய பண்பாட்டு அறிவு – தமிழர்களின் வழமையான சிந்தனை மரபுகள்; பண்பாட்டுக் கூறுகள்: தமிழ்நாட்டு அரசுச் சின்னங்கள் – பண்பாட்டுத் துறை வல்லுநர்கள் – நாட்டுப்புற நடனங்கள், நாட்டுப்புற இசை, நாட்டுப்புற நாடகம் மற்றும் உலகத் தமிழ் மாநாடுகள்.

> **English**
> Ancient Tamil Society – Archeological excavation evidence – Arikamedu, Adichanallur, Keezhadi – Sangam Literature – Classical Tamil; Thirukkural – Guidance for way of life to human elevation – Guidelines given by Thirukkural in the field of administration, judiciary and day to day life – Philosophical thoughts laid down by Thirukkural for betterment and integration of the whole of humanity; Socio-political movements of 19th and 20th centuries, Vallalar's Samarasa Sutha Sanmarga Satya Sangam – Origin and development of Justice Party – Impact of Rationalism Movement, Self-Respect Movement, History and Development of Dravidian Movement, Tani Tamil Iyakkam (Pure Tamil Movement) – Tamil Society Reforms personalities – Thanthai Periyar, Arignar Anna, and other scholars; Arts – Cultural conventions of Tamilians – Ancient cultural knowledge of Tamilians – Conventional thoughts of Tamilians; Cultural Elements: Tamil Nadu State Government Symbols – Experts in Cultural Fields – Folk Dances, Folk Music, Folk Drama, and World Tamil Conferences.

அலகு III: தமிழ்நாட்டின் சிறப்புப் பார்வையுடன் இந்தியாவில் நிலவும் சமூக பிரச்சனைகள் 50 மதிப்பெண்கள்

Unit III: Social Issues in India with specific reference to Tamil Nadu (50 marks)

மக்கள் தொகை பெருக்கம்: கருவுறுதல் – இறப்பு – இடப்பெயர்வு – நோயுற்ற தன்மை – மக்கள் தொகைக் கணக்கெடுப்பு 2011 – மக்கள் தொகை கட்டுப்பாட்டுத் திட்டங்கள் – தேசிய மக்கள் தொகைக் கொள்கை 2000 – குடும்பக் கட்டுப்பாடு மற்றும் அதன் சாதனைகள்; நலவாழ்வு: சுகாதாரக் குறைபாடு – கிராமம் மற்றும் நகர ஏற்றத் தாழ்வுகள் – உட்கட்டமைப்பு குறைபாடு – போதுமான சுகாதார சேவை வழங்காமை – ஊரக பஞ்சாயத்து மற்றும் நகர்புற வளர்ச்சி முகமைகளின் பங்கு – இந்தியாவின் சுகாதார கொள்கை – இந்தியாவின் சுகாதார திட்டங்கள்; குழந்தை தொழிலாளர் மற்றும் குழந்தைகளுக்கு தீங்கிழைத்தல்: குழந்தைக் கல்வி – பள்ளி இடைநிற்றல் – பாலின வேறுபாடுகள் – இந்தியாவில் குழந்தை தொழிலாளர்கள் ஒழிப்பிற்கான முயற்சிகள் – ஊடகமும் அதிகரிக்கும் பாதிப்புகளும் – குழந்தை தீங்கிழைப்புகளிலிருந்து பாதுகாக்கும் சட்டங்கள் மற்றும் நலத் திட்டங்கள்; மகளிருக்கு அதிகாரமளித்தல்: குடும்ப வன்முறை – வரதட்சணை பிரச்சனைகள் – பாலியல் தாக்குதல் – மகளிரை கேலி வதை செய்தல் – கடத்தல் – சட்டங்கள் மற்றும் விழிப்புணர்வு திட்டங்கள் – மகளிருக்கு அதிகாரமளிப்பதில் அரசு மற்றும் அரசு சாரா அமைப்புகளின் பங்கு – நலத் திட்டங்கள்; விளிம்புநிலைக் குழுக்கள்: பிரச்சனைகள் – தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் – முதியோர்கள் – மாற்றுத்திறனாளிகள் – திருநங்கைகள் – மத சிறுபான்மையினர் – விளிம்பு நிலைக் குழுக்கள் மேம்பாட்டிற்கான மத்திய மற்றும் மாநில அரசுகளின் நலத்திட்டங்கள்; சமூக மாற்றங்கள்: நகரமயமாதல் – நவீனமயமாதல் – உலகமயமாதல் – இந்தியாவின் கொள்கை, திட்டமிடல் மற்றும் திட்டங்கள் – சமூகத்தில் வன்முறையின் தாக்கம் – மதவன்முறை – பயங்கரவாதம் மற்றும் சாதிய வன்முறை – காரணங்கள் மற்றும் தீர்வுகள்; நடப்பு நிகழ்வுகள்.

> **English**
> Population Explosion: Fertility – Mortality – Migration – Morbidity – Census 2011 – Population control programmes – National Population Policy 2000 – Family planning and its achievements; Health Care: Poor sanitation – Rural and Urban disparities – Poor infrastructure – Insufficient health care delivery – Role of Panchayat Raj and Urban Development Agencies – Health policy in India – Health care programmes in India; Child Labour and Child Abuse: Child Education – School Dropouts – Gender disparities – Initiatives to eliminate Child Labour in India – Media and enhanced vulnerability – Laws to protect child abuse and welfare schemes; Women Empowerment: Domestic violence – Dowry problems – Sexual assault – Eve teasing – Kidnapping – Laws and awareness programmes – Role of Government and NGOs in women empowerment – Welfare schemes; Marginalised Groups: Problems – Scheduled Castes and Scheduled Tribes – Elderly – People with disability – Transgender – Religious minorities – Central and State Government welfare programmes to marginalised groups. Social Changes: Urbanization – Modernization – Globalization – Policy, Planning and Programmes in India – Impact of Violence on Society – Religious Violence – Terrorism and Communal Violence – Causes and Remedies; Current Affairs.

அலகு IV: வளர்ச்சியில் அறிவியல் மற்றும் தொழில் நுட்பம்

40 மதிப்பெண்கள்

Unit IV: Science and Technology in Development (40 marks)

ரோபோக்களும் பயன்பாடுகளும்; அணுவும் அணுக்கரு இயற்பியலும் – அணு ஆற்றலின் பயன்பாடுகள்; டையோட்களும் டிரான்சிஸ்டர்களும் அவற்றின் பயன்பாடுகளும்; ஒளிபரப்பு தொழில் நுட்பம்; மின்வேதிக்கலங்கள் – மின்முனைகளின் வகைகள் – மின்கலங்கள் – லித்தியம் – அயனிமின்கலன்; எரிபொருள்கள்: வாயு எரிபொருட்கள் – திரவ பெட்ரோலிய வாயு (LPG), இயற்கை வாயு மற்றும் நீர் வாயு; பலபடிச் சேர்மங்கள்: வெப்பத்தால் இளகும் மற்றும் வெப்பத்தால் இறுகும் நெகிழிகள், PVC, PET, நைலான் 66, டெஃப்லான்; மருந்தாக்க வேதியியல்: வலி நிவாரணிகள் – பாராசிட்டமால் மற்றும் ஆஸ்பிரின், எதிர் உயிரிகள் – பெனிசிலின் மற்றும் குளோரோமைசிடின். உயிர் தொழில் நுட்பம்: உயிர் தொழில் நுட்பத்தின் பயன்பாடுகள் – தாவர மரபு பொறியியல் – கோட்பாடுகள் – மரபணு மாற்றுத் தாவரங்கள், உண்ணக்கூடிய தடுப்பூசிகள் (edible vaccines), டெர்மினேட்டர் மரபணு தொழில் நுட்பம், பி.டி.பருத்தி (BT Cotton), தங்க அரிசி (Golden rice), ப்ளேவர் சேவர் (Flavr Savr) தக்காளி, மரபணு மாற்ற தாவரங்களால் சமூகத்திலும் சூழலியலிலும் ஏற்படும் தாக்கம் – பயிர் மேம்பாட்டிற்கு பயன்படுத்தப்படும் உயிர் தொழில் நுட்ப முறைகள் – வனவியல், தோட்டக்கலையில் தாவர திசு வளர்ப்பின் பயன்பாடு – மறுசேர்க்கை டி.என்.ஏ தொழில் நுட்பம் – டி.என்.ஏ குளோனிங் (cloning) – டி.என்.ஏ கைரேகை உத்தி (fingerprinting) – பாலிமரேஸ் சங்கிலி தொடர் வினை (PCR) – என்சைம் இணைக்கப்பட்ட இம்யுனோசார்பன்ட் (ELISA) சோதனையை பயன்படுத்தி நோய்களை கண்டறிதல் – செல் கலப்பு நுட்பத்தை பயன்படுத்தி ஓரின எதிர்ப்பான்களை உற்பத்தி செய்தல் – விலங்கு செல் வளர்ப்பு நுட்பங்கள் – குருத்தணுக்களும் அவற்றின் பயன்பாடுகளும்; ஜி.ஐ.எஸ் (GIS) ன் பயன்பாடுகள்; மீநுண் தொழில் நுட்பம் (Nanotechnology) – அடிப்படைகள் – பயன்பாடுகள் – மீநுண் உரம் (Nano Fertilizer), மீநுண் பூச்சிக் கொல்லிகள் (Nano Pesticides), பசுமை மீநுண் தொழில் நுட்பம் (Green Nano Technology) மற்றும் மீநுண்-விவசாயம் (Nano-Farming); மேம்படுத்தப்பட்ட இனப்பெருக்க நுட்பங்கள்: செயற்கை சோதனை முறை கருவுறுதல் (IVF) – கருப்பையில் கருவூட்டல் (IUI) – கருமுட்டை சைட்டோபிளாசத்தில் விந்தணு செலுத்துதல் (ICSI) – இனச்செல்களை கருக்குழாயில் செலுத்துதல் (GIFT) – பதநிலையில் விந்துக்களைப் பாதுகாத்தல்; கணினியின் உட்கூறுகள் – கணினி பிணையக்கட்டுமானம் மற்றும் உட்கட்டமைப்பு – முறைமை மென்பொருள்கள் மற்றும் பயன்பாட்டு மென்பொருள்கள் – தரவு தொடர்பு வலை அமைப்பு – குறியாக்கவியல் – கணினி வரைவியல் மற்றும் பல் ஊடகம் – நகர்வுக் கணிமை மற்றும் தொடர்பியல் – வலை தொழில் நுட்பம் மற்றும் பயன்பாடுகள் – மின் வணிகம் – மேகக் கணிமைக் கட்டமைப்பு – பொருட்களின் இணையம் (IOT) – செயற்கை நுண்ணறிவு பயன்பாடுகள் – இயந்திர கற்றல் – மின்வெளி பாதுகாப்பு – உயிரியளவியல் – கட்டச் சங்கிலி தொழில் நுட்பம்; நடப்பு நிகழ்வுகள்.

> **English**
> Robotics and Applications; Atomic and Nuclear Physics – Applications of nuclear energy; Diodes and Transistors and their Applications; Broadcasting Technology; Electrochemical cells – Types of electrodes – Batteries – Lithium-ion Battery; Fuels: Gaseous fuels – LPG, Natural gas and water gas; Polymers: Thermoplastics and Thermosetting plastics, PVC, PET, Nylon 66, Teflon; Medicinal Chemistry: Analgesics – Paracetamol and Aspirin, Antibiotics – Penicillin and Chloromycetin; Biotechnology: Applications of Biotechnology – Plant Genetic Engineering – concepts – transgenic plants, edible vaccines, Terminator Gene technology, BT Cotton, Golden rice, Flavr Savr tomato, Social and ecological impact of genetically modified crops – Biotechnological methods for crop

improvement – Application of plant tissue culture in Forestry, Horticulture – Recombinant DNA Technology – DNA cloning – DNA fingerprinting – applications of PCR and ELISA in disease diagnosis – hybridoma techniques in the production of Mono Clonal Antibodies (MCA) – Animal cell culture techniques – stem cells and its applications; Applications of GIS; Nanotechnology – Fundamentals – Applications – Nano Fertilizer, Nano Pesticides, Green Nanotechnology and Nano-farming; Advanced reproductive techniques: In-Vitro Fertilisation (IVF) – Intra–Uterine Insemination (IUI) – Intra Cytoplasmic Sperm Injection (ICSI) – Gamete Intra-Fallopian Transfer (GIFT) – cryopreservation of sperm; Components of Computer – Computer Organization and Architecture – System Software and Application Software – Data Communication Networks – Cryptography – Computer Graphics and Multimedia – Mobile Computing and Communication – Web Technology and applications – E-Commerce – Cloud Computing Architecture – IOT – Artificial Intelligence Applications – Machine learning – Cyber Security – Biometrics – Blockchain Technology; Current Affairs.

அலகு V: அரசியலமைப்பு, அரசியல் மற்றும் ஆளுகை (தமிழ்நாட்டின் சிறப்புப் பார்வையுடன்) 60 மதிப்பெண்கள்

Unit V: Constitution, Polity and Governance in India with specific reference to Tamil Nadu (60 marks)

